**டிசம்பர் – 21**

# TNPSC துளிகள்

- மத்திய நிலக்கரித் துறை அமைச்சகம் ஆனது, ஜார்க்கண்ட் மாநிலத்தின் லதேஹர் மாவட்டத்தில் உள்ள வடக்கு தாடு (மேற்கு பகுதி) நிலக்கரித் தொகுதியை நெய்வேலி லிக்னைட் கழகம் இந்தியா லிமிடெட் நிறுவனத்திற்கு ஒதுக்கீடு செய்துள்ளது.
    - தாடு 434.65 மில்லியன் டன்கள் நிலக்கரி இருப்புக்களைக் கொண்டுள்ள நிலையில், மேலும் அதன் உச்ச கட்டத் திறன் ஆண்டிற்கு மூன்று மில்லியன் டன்கள் ஆகும்.
- இந்திய விமானப் படை நடத்திய அஸ்ட்ராசக்தி பயிற்சியின் போது நிலத்திலிருந்து வானில் பாய்ந்து தாக்கும் (SAM) ஆகாஷ் ஏவுகணை அமைப்பு ஆனது ஈடுபட்டு ஒரே நேரத்தில் நான்கு ஆளில்லா விமானங்களை அழித்தது.
- "உலகின் மிகப்பெரிய பணியிடம்" என்று அழைக்கப்படும் சூரத் வைர வர்த்தக மையத்தினை (SDB) இந்தியப் பிரதமர் அவர்கள் குஜராத்தில் திறந்து வைத்தார்.
- கோடக் மஹிந்திரா வங்கி லிமிடெட் நிறுவனத்துடன் இணைந்து கான்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்வி நிறுவனத்தில் (IIT) இந்தியாவின் முதலாவது முழுமையாக ஒருங்கிணைக்கப் பட்ட நிலைத்தன்மை கல்லூரி தொடங்கப்பட்டுள்ளது.
- சமூகப் பங்குச் சந்தைகளில் (SSE) பட்டியலிடப்பட்ட முதல் நிறுவனமாக SGBS உன்னதி அறக்கட்டளை மாறியுள்ளது.
- ரியல் விஷன் ஹோம்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் தலைவர், டாக்டர் ஸ்ரீனிவாஸ் நாயக் தாராவத், டெல்லியில் நடைபெற்ற 5வது தேசிய மாநாட்டில் AASRAA அமைப்பின் 2023 ஆம் ஆண்டு தொலைநோக்கு மிக்கத் தலைவர் என்ற விருது வழங்கி கௌரவிக்கப் பட்டார்.
- மிச்சிகன் மாகாணத்தினைச் சேர்ந்த மருத்துவ மாணவி ரிஜுல் மைனி, சமீபத்தில் நியூ ஜெர்சியில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டு அமெரிக்க இந்திய அழகிப் போட்டியில் பட்டத்தை வென்றார்.
    - சலோனி ராம்மோகன் மற்றும் சினேகா நம்பியார் ஆகியோர் முறையே பதின்ம வயது அழகி மற்றும் இந்திய அமெரிக்க திருமதி அழகிப் பட்டங்களைப் பெற்றனர்.
- ரியோ டின்டோ எனப்படுகின்ற ஒரு முன்னணி உலகளாவியச் சுரங்க மற்றும் மூலப் பொருட்கள் நிறுவனமானது, தனது 150வது ஆண்டு நிறைவை இந்திய அஞ்சல் துறை சிறப்பு அஞ்சல் தலை அறிமுகத்துடன் கொண்டாடியது.
- இந்தியாவின் முன்னணி ரோபோ தொழில்நுட்ப நிறுவனங்களில் ஒன்றான கேரளாவைச் சேர்ந்த ஜென்ரோபோடிக் இன்னோவேசன்ஸ் என்ற நிறுவனத்தின் நிறுவனர்கள், மதிப்புமிக்க 'ஃபோர்ப்ஸ் இதழின் 30 வயதிற்குட்பட்ட 30 முன்னணி தொழில் முனைவோர்கள் - ஆசியா 2023' பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- தி வீக் இதழின் ஹன்சா ஆராய்ச்சி 2023 அறிக்கையின், 'சிறந்த எழுச்சி பெறும் பல் நோக்கு மருத்துவமனை' பிரிவில் கேரளாவின் கொச்சியில் அமைந்துள்ள ஆஸ்டர் மெட்சிட்டி முதல் இடத்தைப் பெற்றுள்ளது.


# தமிழ்நாடு செய்திகள்

## தமிழகப் பத்திர வெளியீடுகளில் நிறுவையில் உள்ள தொகைகள்

- பத்திரங்கள் வெளியிடுவதன் மூலம் திரட்டப்பட்ட நிதியில், 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில் தமிழ்நாடு மாநிலத்தில் சுமார் 5.38 லட்சம் கோடி ரூபாய் நிலுவையில்

உள்ளது.

- இதில் சுமார் 38.5%, அதாவது 2.07 லட்சம் கோடி ரூபாய் நிலுவைத் தொகைகள் 1 முதல் 5 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை ஆகும்.
- நிலுவைத் தொகையில் 28.6% ஆனது 5 முதல் 10 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டியவை ஆகும்.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் இறுதியில் பத்திரங்கள் வெளியிடப்பட்டதில் இருந்து உருவான நிலுவைக் கடனில், 16.4% ஆனது 20 ஆண்டுகளுக்குப் பிறகு நிறைவு காலத்தினை அடைகிற வேளையில் 9.7% ஆனது 10 முதல் 20 ஆண்டுகளுக்குள் மற்றும் 6.9% ஆனது ஓராண்டிற்குள் அதன் நிறைவுக் காலத்தினை அடைகிறது.
- 2023 ஆம் ஆண்டு மார்ச் மாத இறுதியில், மொத்த நிலுவைத் தொகை 7.41 லட்சம் கோடி ரூபாயாக இருந்தது.




# தேசியச் செய்திகள்

## 2029 ஆம் ஆண்டில் பெண் வாக்காளர்கள்

- 2029 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவில் உள்ள பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை என்பது, ஆண் வாக்காளர்களின் எண்ணிக்கையை விட அதிகமாகும் என்று பாரத் ஸ்டேட் வங்கியின் அறிக்கை கூறியுள்ளது.
- 2024 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 68 கோடியாக இருக்கும் என்றும், அதில் பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை 33 கோடியாக (49%) இருக்கும் என்றும் இந்த அறிக்கை கணித்துள்ளது.
- 2029 ஆம் ஆண்டு முதல், 37 கோடியாக உயர உள்ள பெண் வாக்காளர்கள் எண்ணிக்கை என்பது பதிவு செய்யப்பட்ட ஆண் வாக்காளர்களை விட 36 கோடியை விட அதிகமாக இருக்கும்.
- மேலும் 2047 ஆம் ஆண்டில் பெண் வாக்காளர் எண்ணிக்கை 55% ஆக அதிகரிக்கவும்,

ஆண் வாக்காளர் எண்ணிக்கை 45% ஆகவும் குறையக்கூடும் என்று கணித்துள்ளது.

- 1951 ஆம் ஆண்டு தேர்தலில் எட்டு கோடி பேர் வாக்களித்தனர்.
- 2009 ஆம் ஆண்டு தேர்தலில் இது 42 கோடியாக இருந்த நிலையில், இதில் 19 கோடி பெண்கள் ஆவர்.
- 2014 ஆம் ஆண்டில், வாக்காளர்களின் எண்ணிக்கை 13.7 கோடியாக அதிகரித்து 55 கோடியாக இருந்த நிலையில், அதில் 26 கோடி பெண்கள் ஆவர்.
- இது பெண்களில் 5.8 மடங்கும், ஆண்களில் 5.2 மடங்கும் அதிகமாக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தலில் வாக்களித்த ஆண்களை விட பெண் வாக்காளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருந்தது.
- 2019 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் 67.01% ஆண் வாக்காளர்களும், 67.18% பெண் வாக்காளர்களும் வாக்களித்துள்ளனர்.

- More women than men voted in the 2019 Lok Sabha polls
- Participation of women voters at 67.18% more than men's 67.01%
- Number of women voters increased by 5.1% from 2019 to 2022
- The 3 years, saw number of male voters rise by 3.6%
- Total number of voters rose by 4.3% from 2019 to 2022
- Total voters now at 95.1 crore against 91.2 crore 3 years ago
- There are 46.1 crore women voters now from 43.8 crore in 2019
- Number of male electors up from 47.3 crore, now at 49 crore

## மின்னணு மூலத் தரவுப் பரிமாற்ற அமைப்பு (EODES)

- இந்தியா-கொரியா மின்னணு மூலத் தரவுப் பரிமாற்ற அமைப்பு (EODES) ஆனது சமீபத்தில் தொடங்கப்பட்டது.
- இந்த அமைப்பு இந்தியா-கொரியா விரிவான பொருளாதாரக் கூட்டு ஒப்பந்தத்தை (CEPA) சுமூகமாகச் செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது சுங்க ஒத்துழைப்பை மேம்படுத்துதல், தரவு பரிமாற்றத்தை தானியக்கமாக்கச்

செய்தல், சர்வதேசச் சுங்க ஒத்துழைப்புச் செயல் முறையில் உலகளாவியத் தரத்தை அமைத்தல் ஆகியவற்றை செய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## ஆளில்லா விமானத் தொழில்நுட்பச் செயல்விளக்கம்

- பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பு ஆனது தன்னிச்சையாக பறக்கும் விமான தொழில்நுட்பச் செயல்விளக்கத்தினை வெற்றிகரமாக மேற்கொண்டது.
- இதன் மூலம், ஆளில்லா விமானத் தொழில்நுட்பத்திற்கான பல கட்டுப்பாடுகளில் முன்னணித்துவம் பெற்ற நாடுகளின் முதன்மைக் குழுமத்தில் இந்தியா இணைந்து உள்ளது.
- இது அமெரிக்க இராணுவ விமானப்படையில் உள்ள அமெரிக்கன் நார்த்ரோப் க்ரம்மன் நிறுவனத்தின் B-2 'ஸ்பிரிட்' போன்ற மேம்பட்ட குண்டுவீச்சு விமானங்களுக்கு இணையானதாகும்.




# தேசியச் செய்திகள்

## பாஷினி செயற்கை நுண்ணறிவு செயற்கருவி

- பிரதமர் அவர்கள் வாரனாசியில் உள்ள காசி தமிழ் சங்கமத்தில் ஆற்றிய உரையின்

போது நிகழ்நேர செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான 'பாஷினி' என்ற செயற் கருவி பயன்படுத்தப்பட்டது.

- இந்த நிகழ்வின் போது குறிப்பாக தமிழ் பேசும் பார்வையாளர்களுக்கு மொழி சார்ந்த சேவையை வழங்கும் வகையில் 'பாஷினி' வடிவமைக்கப்பட்டுள்ளது.
- பல்வேறு இந்திய மொழிகளைப் பேசும் நபர்களிடையே உரையாடல்களை மிகவும் எளிதாக்கும் செயற்கை நுண்ணறிவு வழியான மொழிபெயர்ப்பு அமைப்பாக இது செயல்படுகிறது.
- இது தனிநபர்கள் தங்கள் சொந்த மொழியில் தொடர்பு கொள்ள அனுமதிப்பதோடு, மொழி சார்ந்த தடைகளையும் நிவர்த்தி செய்கிறது.
- பல இந்திய மொழிகளில் மொழி உள்ளீடுகளை சேகரிப்பதில் கவனம் செலுத்தும் வகையில், பாஷா தான் அமைப்பு பாஷினி திட்டத்தில் ஒரு முக்கிய முன்னெடுப்பாகச் செயல்படுகிறது.




## மாநிலங்களுக்கிடையேயான தளவாடப் போக்குவரத்தினை எளிதாக்குதல் 2023

- "பல்வேறு மாநிலங்களுக்கிடையேயான தளவாடப் போக்குவரத்தினை எளிதாக்குதல் (LEADS) 2023" அறிக்கையானது சமீபத்தில் வெளியிடப்பட்டது.
- உலக வங்கியின் 2018 ஆம் ஆண்டு தளவாடங்கள் செயல்திறன் குறியீட்டின் அடிப்படையில் உருவாக்கப்பட்டு, காலப்போக்கில் LEADS அறிக்கையாக உருவாகி உள்ளது.
- இது மாநிலம்/ஒன்றியப் பிரதேச அளவில் தளவாடச் செயல்திறனை மேம்படுத்தச் செய்வதற்கான நுண்ணறிவுகளை வழங்குகிறது.
- நாட்டின் தளவாடச் செலவினம் ஆனது 7.8 சதவீதம் முதல் 8.9 சதவீதம் வரை இருக்கும்

மதிப்பிடப்பட்டுள்ளது.

❖ 2023 ஆம் ஆண்டு LEADS அறிக்கையில் சிறந்த செயல்திறன் கொண்ட மாநிலங்கள்

| | சாதனை படைத்தவை | வேகமாக முன்னேறி வருபவை | இலக்கு நிர்ணயித்துள்ளவை |
|---|---|---|---|
| கடற்கரை சார்ந்த மாநிலங்கள் | ஆந்திரா, குஜராத், கர்நாடகா, தமிழ்நாடு | கேரளா, மகாராஷ்டிரா | கோவா, ஒடிசா, மேற்கு வங்காளம் |
| நிலத்தால் சூழப்பட்ட மாநிலங்கள் | ஹரியானா, பஞ்சாப், தெலுங்கானா, உத்தரப் பிரதேசம் | மத்தியப் பிரதேசம், ராஜஸ்தான், உத்தரக்காண்ட் | பீகார், சத்தீஸ்கர், இமாச்சலப் பிரதேசம், ஜார்க்கண்ட் |
| வடகிழக்கு மாநிலங்கள் | அசாம், சிக்கிம், திரிபுரா | அருணாச்சலப் பிரதேசம், நாகாலாந்து | மணிப்பூர், மேகாலயா, மிசோரம் |
| ஒன்றியப் பிரதேசங்கள் | சண்டிகர், டெல்லி | அந்தமான் & நிக்கோபார், லட்சத்தீவு, புதுச்சேரி | டாமன் & டையூ/ தாத்ரா & நகர் ஹவேலி, ஜம்மு & காஷ்மீர், லடாக் |

# சர்வதேசச் செய்திகள்

## காட்டெருமை வளங்காப்பிற்கு அச்சுறுத்தல்



❖ உக்ரைனில் நடந்து வரும் போர் ஆனது, காட்டெருமைகளின் மீதான வளங்காப்பு முயற்சிகளுக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.

❖ ஐரோப்பிய வனக் காட்டெருமை என்றும் அழைக்கப்படும் காட்டெருது ஆனது, 1927 ஆம் ஆண்டில் ஐரோப்பியக் காடுகளில் இருந்து அழிந்துவிட்டது.


❖ வனங்களில் சுதந்திரமாக சுற்றித் திரியும் காட்டெருமைகளில் 50 சதவீதத்திற்கும் அதிகமானவை உக்ரைனில் காணப்படுகின்றன.

- ஏறத்தாழ 7,300 ஐரோப்பியக் காட்டெருமைகள் தான் தற்போது காணப்படுகின்றன.

# அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

## க்ருத்ரிம் செயற்கை நுண்ணறிவு

- ஓலா நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரியானவர் க்ருத்ரிம் (சமஸ்கிருதத்தில் செயற்கை என்று பொருள்) என்ற தீர்வினைச் சமீபத்தில் வெளியிட்டார்.
- இது "இந்தியாவின் முதல் பல் கட்டமைப்பு செயற்கை நுண்ணறிவு" தீர்வாகவும் கூறப் படுகிறது.
- இந்த இயங்குதளம் ஆனது ChatGPT உடன் முற்றிலும் ஒத்திருக்கிறது.
- பல்வேறு இந்திய மொழிகளில் GPT-4 விட க்ருத்ரிம் செயற்கை நுண்ணறிவு சிறந்தது.
- இதனால் 20க்கும் மேற்பட்ட இந்திய மொழிகளைப் புரிந்து கொள்ள முடியும் மற்றும் சுமார் 10 மொழிகளில் பதிலை உருவாக்க முடியும்.
- இதில் மராத்தி, இந்தி, வங்காளம், தமிழ், கன்னடம், தெலுங்கு, ஒடியா, குஜராத்தி மற்றும் மலையாளம் ஆகியவை அடங்கும்.
- இது அடிப்படை க்ருத்ரிம் மாதிரி, மற்றும் மிகவும் திறம் வாய்ந்த க்ருத்ரிம் ப்ரோ என இரண்டு வகைப்பாடுகளில் கிடைக்கப் பெறும்.





# சுற்றுச்சூழல் செய்திகள்

## கார்பன் சேகரிப்பில் ஆல்காக்களின் பங்கு

- ஜோத்பூரின் இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் கழகத்தின் புதுமையான தொழில் நுட்பம் ஆனது, கார்பன் டை ஆக்சைடைப் பிடிப்பதற்கும், கழிவுநீரைச் சுத்திகரித்து மின்சாரத்தை உருவாக்குவதற்கும் பாசிக்களின் (ஆல்கா) துணையுடன் இயங்கும் எரிபொருள் கலங்களைப் பயன்படுத்துகிறது.
- கனல் வாயுக்களை பாசி நிறைந்த குளங்களில் குமிழிகளாக்குதல் என்ற வழக்கமான செயல் முறையுடன் ஒப்பிடும்போது, அவற்றின் மறைமுக உயிர்வேதியியல் செயல் முறை மிகவும் செயல் திறன் மிக்கதாக உள்ளது.
- இது கார்பன் டை ஆக்சைடை கார்பனேட்டுகளாக மாற்றுவதோடு, நீரில் உள்ள கனிம

கார்பனின் கரைதிறனை அதிகரிக்கிறது, இதனால் இது நீரில் கார்பன் தக்க வைப்புத் திறனை அதிகரிக்கிறது.

- இந்தத் திறந்த குளங்கள் சார்ந்த செயல்முறைகளை விட ஒளிசார் உயிரி உலைகள் போன்ற முழுவதும் மூடப்பட்ட அமைப்புகளின் பயன்பாடு விரும்பத் தக்கதாக கூறப் படுகிறது.
- அவை பைகார்பனேட்டுகள் $CO_2$ ஆக சிதைவதைத் தடுப்பத்தோடு, அதன் pH அளவைப் பேணுகின்றன.
- கூடுதலாக, இந்தத் தொழில்நுட்பம் ஆனது கழிவுநீரைப் பயன்படுத்துவதோடு, இது கழிவு நீர்நிலை போன்ற நிலைமைகளில் செழித்து வளரும் திறன் கொண்ட ஒரு வெப்ப நிலை தாங்கும் ஆல்கா திரிபினை (குளோரெல்லா வல்காரிஸ்) பயன்படுத்துகிறது.




# மாநிலச் செய்திகள்

## உணவு கலப்படம் தொடர்பான வழக்குகள்



- தேசியக் குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) வெளியிட்டுள்ளத் தரவுகளின்படி, உணவுக் கலப்படம் தொடர்பான வழக்குகளில் நாட்டிலேயே ஹைதராபாத் நகரம் முதலிடத்தில் உள்ளது.
- இதில் தெலுங்கானா முதலாவது இடத்திலும் அதைத் தொடர்ந்து, ஆந்திரப் பிரதேசமும் உள்ளது.

- 2022 ஆம் ஆண்டில், இந்தியாவில் உள்ள 19 முக்கிய நகரங்களில் மொத்தம் 291 உணவுக் கலப்பட வழக்குகள் பதிவாகியுள்ளன.
- இந்த வழக்குகளில் மொத்தம் 246 வழக்குகள் மிகவும் அதிர்ச்சியூட்டும் வகையில் ஹைதராபாத்தில் மட்டுமே பதிவாகியுள்ளன.

## மணிப்பூரில் மதுபானம் அறிமுகம்

- மணிப்பூர் மாநில அமைச்சரவையானது, 30 ஆண்டு கால இடைவெளிக்குப் பிறகு அம்மாநிலத்தில் மது விற்பனை மற்றும் நுகர்வை சட்டப்பூர்வமாக்கியுள்ளது.
- மதுபானங்கள் தயாரிப்பு, உற்பத்தி, உடைமை, ஏற்றுமதி, இறக்குமதி, சரக்குப் போக்குவரத்து, கொள்முதல், விற்பனை மற்றும் நுகர்வு ஆகியவற்றுக்கு அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- மணிப்பூர் மாநில பானங்கள் கழக லிமிடெட் (MSBCL) நிறுவனத்தையும் இது நிறுவியது.
- தற்போது நடைபெற்று வரும் இன மோதல் மற்றும் போதைப்பொருள் மற்றும் மது ஆகியவற்றின் தவறானப் பயன்பாடுகளுக்கு எதிரான பிரச்சாரத்தின் மத்தியில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.
- அம்மாநில அரசு ஆனது, இந்த சட்டப்பூர்வமாக்கல் மூலம் ஆண்டிற்கு 600-700 கோடி ரூபாய் வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளது.
- மணிப்பூர் அரசு 1991 ஆம் ஆண்டில் 'மணிப்பூர் மதுவிலக்கு சட்டத்தை' இயற்றியது என்பதோடு, கடந்த ஆண்டு அத்தடையை பகுதியளவு நீக்கவும் செய்தது.
- பட்டியலிடப்பட்டச் சாதியினர் மற்றும் பழங்குடியினர் சமூகங்களுக்கு அவர்களின் பாரம்பரிய முறைகள் மற்றும் வழக்கமான பல்வேறு சட்டங்களின் கீழ் மதுபானம் காய்ச்சுவதற்கு இது விலக்கு அளித்துள்ளது.




# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## அறிவியல் மற்றும் புதுமை மேலாண்மைக்கான 2023 ஆம் ஆண்டு ஃபாலிங் வால்ஸ் பரிசு

- அப்தௌளயே டையாபேட் அவர்களின் ஆராய்ச்சிப் பணிக்காக அறிவியல் மற்றும் புதுமை மேலாண்மைக்கான 2023 ஆம் ஆண்டு ஃபாலிங் வால்ஸ் பரிசு வழங்கப்பட்டது.

- மலேரியாவை உண்டாக்கும் பெண் கொசுக்களின் மரபணுக்களை மாற்றுவதன் மூலம் அவற்றை அழிக்கக் கூடிய ஒரு புதுமையான நுட்பத்தை அவர் உருவாக்கினார்.
- மலேரியா பொதுவாக பெண் அனாபிலிஸ் கொசுக்கள் கடிப்பதன் மூலம் பரவுகிறது.
- மரபணு இயக்கிகள் என்ற ஒரு தொழில்நுட்பத்தின் கீழ், மரபணு மாற்றப்பட்ட ஆண் கொசுக்களைச் சுற்றுச்சூழலில் விடுவதன் மூலம், பெண் கொசுக்கள் புதிய பெண் சந்ததிகளை உற்பத்தி செய்வதைத் தடுக்கின்றன.
- இது பெண் கொசுக்கள் குறைவதற்கு வழிவகுக்கும் என்பதால் இதன் மூலம் கண்டம் முழுவதும் மலேரியா ஏற்படுவதற்கான காரணங்கள் குறையும்.
- 2021 ஆம் ஆண்டில் உலகளவில் ஏற்பட்ட 619,000 உயிரிழப்புகளில் சுமார் 96 சதவிகிதப் பங்குடன், உலகின் மிகப்பெரிய மலேரியா பாதிப்பினை ஆப்பிரிக்கா கொண்டுள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் சமீபத்திய தரவுகளின்படி, அந்த 96 சதவீதத்தில், 80 சதவீத இறப்புகள் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் மத்தியில் ஏற்பட்டுள்ளன.




## ஷேக் நவாஃப் அல்-அஹ்மத் அல்-ஜாபர் அல்-சபா



- குவைத்தின் அமீர், எமிர் ஷேக் நவாப் அல் அகமது அல் சபா அண்மையில் காலமானார்.
- பட்டத்து இளவரசர் ஷேக் மெஷால் அல்-அஹ்மத் அல்-சபா, ஷேக் நவாப்பின் வாரிசாக

நியமிக்கப்பட்டுள்ளார்.

- குவைத்தின் அமீருக்கு மரியாதை செலுத்தும் வகையில் டிசம்பர் 17 ஆம் தேதியன்று நாடு முழுவதும் அரச துக்கத்தை அனுசரிப்பதாக இந்தியா அறிவித்தது.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் - டிசம்பர் 18

- 2000 ஆம் ஆண்டு டிசம்பர் 04 ஆம் தேதியன்று, ஐக்கிய நாடுகள் பொதுச் சபை இந்த நாளை நியமித்தது.
- 1990 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் அனைத்து புலம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் நல உரிமைகளைப் பாதுகாப்பதற்கான சர்வதேச உடன்படிக்கையினை ஏற்றுக் கொண்டதை இந்த தேதி நினைவு கூருகிறது.
- 2020 ஆம் ஆண்டில், 281 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் சர்வதேச அளவில் புலம் பெயர்ந்தோர் ஆவர்.
- 2021 ஆம் ஆண்டின் இறுதியில், 59 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் உள்நாட்டில் இடம் பெயர்ந்துள்ளனர்.
- 2023 ஆம் ஆண்டிற்கான இந்தத் தினத்தின் கருத்துரு, "பாதுகாப்பானப் புலம்பெயர்வை ஊக்குவித்தல்" என்பதாகும்.




## அரபு மொழி தினம் - டிசம்பர் 18





- ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது, 1973 ஆம் ஆண்டின் இந்த நாளில் அதன் ஆறாவது அதிகாரப் பூர்வ மொழியாக அரபு மொழியை ஏற்றுக் கொண்டது.

- இது தினமும் 400 மில்லியனுக்கும் அதிகமான மக்களால் பயன்படுத்தப்படுகிறது.
- இந்த நாள் 2012 ஆம் ஆண்டு முதல் கொண்டாடப்படுகிறது.
- 2023 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "அரபு - கவிதை மற்றும் கலைகளின் மொழி" என்பதாகும்.

### கோவா மாநில விடுதலை தினம்- டிசம்பர் 19

- 1961 ஆம் ஆண்டு போர்த்துகீசிய ஆட்சியிலிருந்து அம்மாநிலம் விடுவிக்கப்பட்டதை நினைவு கூரும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.
- இந்திய ஆயுதப் படைகளால் மேற்கொள்ளப்பட்ட ‘விஜய் ராணுவ நடவடிக்கையின்’ வெற்றியைக் குறிக்கும் வகையில் இது கொண்டாடப்படுகிறது.
- கோவாவில் போர்த்துகீசியக் காலனி ஆதிக்கம் 1510 ஆம் ஆண்டில் தொடங்கியது.
- சுமார் 451 ஆண்டுகளாக கோவா போர்த்துகீசிய ஆட்சியின் கீழ் இருந்தது.
- கோவா மற்றும் இரண்டு முன்னாள் போர்த்துகீசியப் பகுதிகள் கோவா, டாமன் மற்றும் டையூ ஒன்றியப் பிரதேசமாக மாறியது.
- 1987 ஆம் ஆண்டு மே 30 ஆம் தேதியன்று, கோவா பிரதேசமானது பிரிக்கப்பட்டு இந்தியாவின் 25வது மாநிலமாக கோவா உருவாக்கப்பட்டது.




## இதரச் செய்திகள்

### ஜாய்நகர் மோவா

- ஜாய்நகர் மோவா தயாரிப்பாளர்கள், போலி தயாரிப்புகளை கண்டறிவதற்காக என்று தங்கள் தயாரிப்புகளைப் பட்டைக் குறியீடுகள் மற்றும் விரைவுத் தகவல் குறியீடுகள் கொண்ட பெட்டிகளில் விற்பனை செய்ய உள்ளனர்.

- மோவா என்பது டிசம்பர் முதல் பிப்ரவரி மாதம் வரை, பிரித்தெடுக்கப்படும் புதிய பேரிச்சம்பழம்-பனை வெல்லத்துடன் சேர்த்து உருவாக்கப்படும் ஒரு பொறி அரிசி உருண்டையாகும்.
- கொல்கத்தாவில் இருந்து சுமார் 50 கி.மீ. தொலைவில் அமைந்துள்ள ஜாய்நகர் நகரம் முழுவதும் ஒத்ததாக இதனைத் தயாரிக்கும் பகுதியாக உள்ளது.
- இந்த இனிப்பு வகையானது 2015 ஆம் ஆண்டில் ஜாய்நகர் மோவா என்ற புவிசார் குறியீட்டினைப் பெற்றது.



★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★